# சித்தர்களின் வாழ்வியல் சிந்தனைகள்

**முனைவர் பா.நேருஜி**
**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை**
**செந்தமிழ்க் கல்லூரி, தமிழ் உயராய்வு மையம்**
**மதுரை-625001**

27

**ஆய்வுச் சுருக்கம்**

சித்தர் என்ற சொல்லுக்குச் சாதனை புரிந்தவர், சித்தியை அடைந்தவர், தேவர்களில் ஒரு பிரிவினர், திறமையாளர், கெட்டிக்காரார், முழுமை அடைந்தவர், வெற்றியாளர், வெற்றியை ஈட்டியவர் என்று பலவாறு பொருளுரைக்கப்படுகின்றன. எண்வகை சித்திகள் கைவரப் பெற்றவரைச் சித்தர் என்பர். எண்வகை சித்திகள் : 1. அணிமா – அணுவைப் போல் சிறிதான தேகத்தை அடைதல் (சுருங்கும் வன்மை) 2. மகிமா – மலையைப் போல் பெரிதாதல் (பருத்தல்) 3. இலகிமா – காற்றைப் போல் இலேசாய் இருத்தல் (கனமின்மையாதல்) 4. கரிமா – கனமாவது, மலைகளாலும் வாயுவினாலும் அசைக்கவும் முடியாமல் பாரமாயிருத்தல் (இரும்பு, மலையைவிடக் கனத்தல்) 5. பிராத்தி – எல்லாப் பொருள்களையும் தன்வயப்படுத்துதல், மனத்தினால் நினைத்தவை யாவையும் அடைதல். அவற்றைப் பெறுதல் (வேண்டியவற்றை அடைதல், வேண்டிய இடம் செல்லல்) 6. பிரகாமியம் - தன் உடலைவிட்டுப் பிற உடலில் புகுதல் (கூடுவிட்டுக் கூடு பாய்தல்), நீர் மேல் நடத்தல், நீருள் இருத்தல். 7. ஈசத்துவம் - நான்முகன் முதலான தேவர்களிடத்தும் தன் ஆணையைச் செலுத்துதல் (எல்லாப் பொருளுக்கும் தலைவராகும் ஆற்றல்) 8. வசித்துவம் - அனைத்தையும் வசப்படுத்தல் (வசியம்), எல்லாவற்றையும் தன்வயமாக்கும் ஆற்றல். உலகம் இயங்கிக் கொண்டிருக்கக் காரணம்.

**திறவுச் சொற்கள்**

சித்தர், இயற்கை நெறி, பழி, உடலைப் பேணுதல், ஆன்மா, அன்பு, கள், புலால், தானம், தருமம், ஈகைப் பண்பு.

**முன்னுரை**

இந்திரர்குரிய அமுதமே கிடைப்பதாயினும், அது தமக்கு இனியது எனக் கருதித் தாமே தனித்து உண்டலும் இல்லாதவர், சினமற்றவர், பிறர் அஞ்சுவதற்குத் தாமும் அஞ்சிவாளாது சோம்பி இருப்பவருமல்லர், புகழ் எனின் உயிரும் கொடுப்பவர். பழி எனின் உலகம் முழுவதுமே

பெறுவதாயினும் மேற்கொள்ளார். அயர்வு அற்றோர் அத்தகைய மாட்சிமைப் பட்டவராக வாழ்பவர் உயர்ந்தோராவார். அவர் தமக்கென எதுவும் செய்யாது, பிறர்க்கென உழைக்கும் உண்மையான இயல்பு உடையவராக இருத்தலே அவர் பெற்றிருக்கும் பெருந்தகுதிக்குக் காரணமாகும். இவராலேயே சிறப்புடன் வாழ்கிறது உலகம்.

உண்டால் அம்ம, இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலார்
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனில் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும்; கொள்ளார் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே (புறநானூறு, பாடல்.182)

இவ்வாறு தமக்கென வாழாது வாழ்ந்தவர்கள் வாழ்பவர்கள் சித்தர்கள் ஆவர்.

**வழிபாட்டு இயற்கை நெறி**

இறைவனை இந்த பச்சிலை கொண்டு வழிபடுங்கள் என்று குறிப்பிட்டுச் சொன்னால் அது கிடைக்கவில்லை என்பார்கள். எனவே திருமூலர் பொதுவாக இறைவனை ஒரு பச்சிலை கொண்டு பூசை செய்யுங்கள் எனக் குறிப்பிடுகிறார். சிவனுக்கு வில்வம், பெருமாளுக்கு துளசி, அம்மனுக்கு வேப்பிலை, விநாயகருக்கு அருகம்புல் எனப் பச்சிலைகள் கொண்டு வழிபடலாம். இந்த இலைதான் என்று இல்லை. ஈசன் தன் மீது சாக்கிய நாயனார் கல்லை எறிந்த போதும் மலராக எண்ணி மகிழ்ந்தார். எனவே ஏதேனும் ஒரு பச்சிலையால் அர்ச்சித்தாலும் மனமுவந்து ஏற்றுக் கொள்வார் சிவபெருமான். அதற்கு வாய்ப்பில்லை எனில், பசுவிற்கு ஒரு வாயுறை கொடுங்கள் என்கிறார். வாயுறை என்னும் பெயர்ச் சொல்லிற்கு உண்கை, உணவு, அருகம்புல், அன்னப்பிராசம், கவள், மருந்து, உறுதிமொழி, மகளிர் காதணி என தமிழ் அகராதி எட்டுப் பொருள்களைக் குறிக்கின்றது. இதற்கு பசுவிற்கு ஒரு வாயளவு புல் உணவு கொடுங்கள் என பொருள் கொள்ளலாம். இது ஜீவகாருண்யம் வகைப்படும். பசுவிற்கு உணவிட வாய்ப்பில்லை எனில் பசியால் வாடுபவர்களுக்குத் தலைவாழை இலையில் அறுசுவை உணவு படைக்க வேண்டும் என்பதில்லை. நீங்கள் சாப்பிடும் போது ஒரே ஒரு கைப்பிடி எடுத்து வறியவர்க்கு சாப்பிடக் கொடுங்கள். அதற்கு தனியாக சமைக்க வேண்டியது இல்லை உணவு தயாரிக்கும்போதே ஒரு கையளவு சேர்த்து சமைத்தாலே போதுமானது. இது பசிப்பிணி போக்குதல் வகைப்படும். இவை மூன்றையும் செய்ய இயலாவிட்டாலும் பரவாயில்லை. எல்லோரிடமும் இனிமையான வார்த்தைகளையே பேசுங்கள். இது எல்லோரும் செய்யக்கூடிய மிக எளிய வழிபாடு. அதுவே இறைவனை வழிபடும் முறை என திருமூலர் வலியுறுத்திக்

கூறியுள்ளார்.

யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே (திருமூலர், திருமந்திரம்-252).

**உடலைப் பேணுதல்**

உடம்பினை இழுக்கென்று எண்ணுதல் கூடாது. உடம்புதான் இறைவன் அமரக்கூடிய ஆலயமாகும். உடல் தூய்மையை மிகவும் பேணவேண்டும் என்கிறார் திருமூலர். அத்தகு உடம்பைக் குற்றம் எனக் கருதாது துய்மையாக வைக்க வேண்டும் என்கிறார். உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன், உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே என்கிறார்.

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திறம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே **(திருமூலர், திருமந்திரம்-211).**

உடம்பு அழிந்தால் உயிரும் அழியும். உறுதியான மெய்ஞ்ஞானத்தை அடைய முடியாது. ஆகவே, உடம்பை வளர்த்தேன், அதனால் உயிரையும் வளர்த்துக் கொண்டேன் என்கிறார்.

**ஆன்மா லயிக்கக் கூடிய இடம் ஆலயம்**

உள்ளம் ஒரு பெரிய கோயில், இந்த மாமிச உடம்பு ஒரு ஆலயம், வாய்தான் அந்த கோபுரத்தின் வாசல், சந்தேகம் இல்லாமல் தெளிந்த மனம் உடையவர்களுக்குச் சீவனே சிவன். சிவன் வேறு எங்கும் இல்லை. கள்ளமான புலன்கள் செய்யும் இயல்பு உடையனதான். இருந்தாலும் அறியாமை என்ற இருளைப் போக்கி அறிவுஒளி பெற உதவுவது இந்த புலன்கள்தானே. இதனை ஆசை கோபம் களவு கொள்பவன் பேசத்தெரிந்த மிருகம், அன்பு நன்றி கருணை கொண்டவன் மனித வடிவில் தெய்வம், இதில் மிருகம் என்பது கள்ளமனம் உயர் தெய்வம் என்பது பிள்ளைமனம் இந்த ஆறு கட்டளை அறிந்த மனதில் ஆண்டவன் வாழும் வெள்ளை மனம் என்பர்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானுக்கு வாய் கோபுரவாயில்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காணாமணி விளக்கே **(திருமூலர், திருமந்திரம்-1857).**

**அன்பே சிவம்**

இறைவன் அன்பு வடிவானவன், அன்பென்னும் பிடியில் அகப்படுபவன், அன்பு என்ற கயிற்றால் அவனை எளிதில் கட்டலாம். சிவம் என்பது அன்பின் குறியீடு என்பர். அன்பு வேறு சிவம் வேறு இரண்டும் ஒன்றல்ல, வேறுவேறு என்று சொல்பவர்கள் அறிவில்லாத மூடர்கள்.

அன்பே சிவம் என்பதை யாரும் அறியாதிருக்கிறார்கள். அன்புதான் சிவம் என்பதை எல்லோரும் அறிந்துவிட்டால் பிறகு அவர்களே அன்புருவான சிவமாய் வாழ்ந்திருப்பார்கள். அன்புதான் கடவுள் என்பதை ஆணித்தரமாகத் திருமூலர் சொல்கிறார்.

அன்பும் சிவமும் இரண்டென்பர்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே (திருமூலர், திருமந்திரம்-270).

இதனையே அன்பிற் சிறந்த தவமில்லை என்கிறார் பாரதி. கண்ணப்பர் பூசை முறை பற்றி சிவகோசாரியரிடம் கனவில் சிவன் உரைத்தது. நாளை அவன் என்னை வழிபடும் முறையைப் பார். அவன் என்மீது உமிழ்கிற எச்சில் உயர்ந்த கங்கை முதலான தீர்த்தங்களைவிடப் புனிதமானது. அவன் தலையில் வைத்த பூவை எனக்குச் சூடிவைப்பது தேவர்கள் பூசையில் எனக்குச் சூட்டி வழிபடுவதை விடச் சிறப்பானது. செருப்புக் காலால் மிதிப்பது முருகனின் பாதம் மேனியில் படுவது போன்றது என்று கூறப்படுகிறது. கண்ணப்பர் தம் மனதில் அன்பு கொண்டவராக இருக்கவில்லை. அன்பே உருவம் எடுத்து வந்தது போல் இருந்தார் என்று கூறுகிறார் சேக்கிழார்.

**கள் உண்ணாமை**

பசுக்கள் தாகத்தால் வருந்தினாலும் கழுநீரை உண்ணுமே தவிர பிறநீரை அருந்தாது. ஆனால் மனிதர்கள் சிவ இன்பம் என்ற தேனை விரும்பாமல் மதுவை உண்டு கெடுகின்றனர் என்று கடிந்துரைக்கிறார் திருமூலர்.

கழுநீர் பசுப்பெறில் கயந்தொறும் தேரா
……. ………………… …………..
முழநீர்க் கள் உண்போர் முறைமை அகன்றோர்
**(திருமூலர், திருமந்திரம்-324).**

கள் உண்பவர் நல்ல ஒழுக்கத்தினின்று விலகியவராவார் என்கிறார். கள்ளானது உண்பவரை மயக்கச் செய்யும், பெண் இன்பத்தை நாடி அடையும்படித் தூண்டும். கள் உண்பவர் நல்ல ஞானத்தில் தலைபடார் எனக் கள் உண்ணுதலைக் கண்டிக்கிறது என்பதனை, மயக்கும் தியங்கும் கள் வாய்மை அழிக்கும் (திருமூலர்,திருமந்திரம்-330) என்கிறது.

**புலால் உண்ணாமை**

புலால் உண்ணுதல் உயிரினங்களுக்கு ஊறு விளைவிக்கும் கொடுஞ்செயலாகும். அறஇலக்கியங்கள் எவ்வுயிருக்கும் துன்பம் விளைவிக்கக்கூடாது எனப் புலால் உண்ணுதலை கண்டிக்கின்றன. திருமந்திரமும் ஊண் உண்பவர்களைக் கடுமையாகச் சாடுகிறது. ஊண் உண்பவர்கள் கீழான மக்கள் என்றும் இவர்களை எமதூதர்கள் கரையானைப் போல் பறித்துக் கொண்டு சென்று தீப்பொருந்திய நரகத்தில் முதுகைக் கீழ்ப்பக்கமாகக் கடத்தி வைப்பர் எனக் கூறுகிறது. இதனை,

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாரும் காண இயமன்தன் தூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்து வைப்பாரே (திருமூலர், திருமந்திரம்-199).

தனிமனித அறங்களில் தனிச்சிறப்பிற்குரியது கொல்லாமை. எந்த உயிரையும் கொல்லும் உரிமை எவர்க்கும் இல்லை. மற்றொரு உயிரினைக் கொல்லுவதன் மூலம் உயிர் வாழ்வன விலங்குகளே, இச்செயல்களில் மனிதர்கள் ஈடுபாடு கொள்வோரானால் அனல் கொண்ட நகரம் அடைவது உறுதி என்கிறார் திருமூலர்.

கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லடிக் காரர் வலிக்கயிற் றாற்கட்டிச்
செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை
நில்லிடும் என்று நிறுத்துவர் தாமே (திருமூலர், திருமந்திரம்-198).

என்கிறார் திருமூலர். ‘கொல்’ எனவும் ‘குத்து’ எனவும் கொல்லுதலை மேற்கொண்ட விலங்கை ஒத்தவர்கள் நரகத்தில் நெடுங்காலம் நிற்கக் கடவர் என அறிவுறுத்துகிறது.

புலால் உண்ணாமையே கொல்லாமைக்கு அடிப்படையாக அமைகின்றது. உலகில் அவதரிக்கும் உயிர்கள் யாவும் ஒரு காரணத்தின் அடிப்படையாய் வாழ்வியல் கொண்டுள்ளது. அதனைக் கொன்று அதன் ஊனைத்தின்றால் நரகம் அடைவது உறுதி என்கிறார் திருமூலர். மறுமைக்குக் காரணமான இறைவன் வணக்கத்திற்கு இக்கொல்லாமையே சிறந்தது. எனவேதான் உயிர்ப்பலியற்ற மலர்பலியினை உடைய இயற்கைநெறி வழிபாட்டினையே இறைவன் விரும்புகிறான். மலரிட்டு இறைவனை வணங்குதலைக் காட்டிலும் உயிர்க்கொலை செய்யாமை சிறந்தது என்று கூறுகின்றனர்.

**அன்னதானச் சிறப்பு**

அன்னதானச் சிறப்பு என்பது விருந்தோம்பல் பண்பு என்றும் அழைக்கப்படுகின்றது. அவர்கள், இவர்கள், பிடித்தவர், பிடிக்காதவர், உறவினர், வேற்றார் என்று எவ்விதப் பாகுபாடும் எண்ணாமல் உணவை அனைவருக்கும் கொடுத்து உதவுங்கள். சாப்பிடுவதற்கு முன்பு பசியோடு யாராவது வருகிறார்களா? என்று பார்த்துவிட்டுப் பிறகு சாப்பிடுங்கள். சாப்பிடாமல் வைத்த மீந்த பழைய உணவை சேமிப்பாகக் கருதி எடுத்து வைக்காமல் அதை உடனே பசியோடு இருப்பவர்களுக்குக் கொடுத்துவிடுங்கள். உணவின் மேல் அதிக ஆசை வைக்காமலும் பசியோடு இருக்கும்போது அவசர அவசரமாக வேகமாகச் சாப்பிடாமலும் இருங்கள். காக்கை தான் பசியோடு இருக்கும்போதும் உணவைக் கண்டவிடத்து தன் இனத்தைக் கரைந்து கூப்பிட்டு மற்ற காகங்கள் வந்தபின் ஒன்றாகக்கூடி உண்பதைக் கண்டு அடுத்தவருக்கும் உணவைக் கொடுத்துச் சாப்பிட வேண்டும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். ‘பார்த்திருந்து உண்மின்’ என்பது

விருந்தோம்பலைக் குறிக்கிறது.

ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்
பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர் விரைந்து ஒல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்து உண்ணும் காலம் அறிமினே (திருமூலர், திருமந்திரம்-250).

சான்றோர்கள் போற்றும் தலைசிறந்த அறங்களுள் பகுத்துண்ணல் பண்பு குறிப்பிடத்தக்கதாகும். இதன் சிறப்பினை வள்ளுவர்,

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை (குறள்-322)

என்கிறார். அவரவர்க்கு இயன்ற அறங்களைச் செய்ய வேண்டும் என்பதைத் திருமூலர் ‘யாவர்க்கு மாம் உண்ணும் போதொரு கைப்பிடி’ என்கிறார். இது பகிர்ந்துண்ணும் பண்பினைக் குறிக்கிறது. திருவள்ளுவர்,

காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கே உள (குறள்-527).

என்கிறார். கவிஞர் வாலி அன்புக்கரங்கள் எனும் திரையிசைப் பாடலில் ‘ஒண்ணா இருக்கக் கத்துக்கணும் இந்த உண்மையைச் சொன்னா ஒத்துக்கணும் காக்கா கூட்டத்தைப் பாருங்க அதுக்கு கத்துக் கொடுத்தது யாருங்க’ என்று எளிமைப்படுத்தி இக்கருத்தை பாமர மக்களிடம் கொண்டு சேர்த்துள்ளார்.

**ஈகைப் பண்பு**

தமிழில் ஈ, தா, கொடு என்ற மூன்று சொற்கள் ஈகைத் தொடர்பாகப் பயன்படுத்தப்டுகிறது. ஈ என்பதற்கு உயர்ந்தவரிடம் தாழ்ந்த நிலையில் இருப்போர் கேட்பது. இது அரசன் மற்றும் கொடை வள்ளல்களிடம் புலவர்கள் போன்றோர் கேட்பது. தா என்பதற்கு சமமானவர்களிடம் கேட்பது. இது நண்பர்களிடம் கேட்பது. கொடு என்பதற்கு தாழ்ந்தவரிடத்து ஆணையிட்டுக் கேட்பது. இது அதிகாரத்தோடு வரி வசூல் செய்வது. இதில் ஈகை என்பது எவ்விதப் பயனும் கருதாது ஒருவருடைய துன்பத்தைப் போக்கி அவருக்கு வேண்டியன அளித்தல் எனப்படுகிறது. ஈகை செய்ய முன்வராத பண்பில்லாத செல்வந்தர்களைத் திருமூலர், செல்வம் வந்த நாளில் அறமும் செய்யவில்லை. உலகில் காலத்தைக் கழித்து என்ன செய்வீர். இதை எண்ணிப்பாருங்கள் என்று திருமந்திரம் கூறுகிறது. மேலும் நடமாடும் மனிதருக்குச் செய்யும் தொண்டு இறைவனுக்குப் போய்ச்சேரும். இறைவனுக்கு ஏதேனும் படையல் செய்தால் அது நடமாடும் கோயிலாக விளங்கும் சிவனடியார்க்கு வந்து சேராது. ஆனால் சிவனடியாருக்கு ஏதேனும் ஒன்றைத் தந்தால் அது இறைவனுக்கு மனநிறைவை அளிக்கும் என்கிறார்.

தழுக்கிய நாளில் தருமமும் செய்யீர்

விழித்திருந்து என்செய்வீர் வெம்மை படிந்து

விழிக்க அன்று என்செய்வீர் ஏழைநெஞ்சீரே (திருமூலர், திருமந்திரம்-254).

படமாடக் கோயில் பரமர்க்கு ஒன்றுஈயில்

நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்குஆகா (திருமூலர், திருமந்திரம்-1857).

வாழ்வியல் அறங்களுள் தலைமை சான்ற அறமாக விளங்குவது ஈகை என்பர். தனிமனித வாழ்க்கையில் இரத்தல் இழிவான செயல். ஆனால் சமூகம் சார்ந்து நோக்கும் போது ஈகை உயர்ந்த அறமாகக் கருதப்படுகிறது. ‘செல்வத்துப் பயனே ஈதல்’ என்று புறநானூறு குறிப்பிடுகிறது. ‘ஈதல் இசைபட வாழ்தல்’ என திருக்குறள் சிறப்பிக்கிறது.

**ஆசையை அகற்றுதல்**

உலகில் தோன்றிய பொருட்களின் மீது மனிதன் விருப்பம் கொள்வது இயல்பான ஒன்று. ஆனால் அந்த ஆசையைக் களைந்தால் வாழ்வில் இன்பம் பெறலாம் என்பது ஆன்றோர் வாக்கு. ஆசையே துன்பத்திற்குக் காரணம் என்றார் புத்தர் பெருமான். சற்று நிதானமாக சிந்தித்துப் பார்த்தால் ஆசையே துன்பத்திற்குக் காரணமாக இருப்பதை உணர இயலும். ஆசை சமூகச் சீரழிவை உண்டு பண்ணுவதாய் உள்ளது. பணத்தாசை திருட்டையும், மண்ணாசை அபகரிப்பையும், பெண்ணாசை கொலை வெறியையும் என எத்தனையோ வகையான குற்றங்களையும் உருவாக்கி விடுகிறது. ஆசை அதிகரிக்க அதிகரிக்க அதற்கேற்ப துன்பங்கள் அதிகரித்து அது நம்மை அழித்துவிடும். எனவே ஆசையை விடுங்கள் ஆனந்தம் வந்துசேரும் எனத் திருமூலர் கூறுகின்றார்.

ஆசையறுமின்கள் ஆசையறுமின்கள்

ஈசனோடாயினும்; ஆசையறுமின்கள்

ஆசை படப்பட ஆய்வருந்துன்பங்கள்

ஆசை விடவிட ஆனந்தமாகுமே (திருமூலர், திருமந்திரம்-2615).

என்பர். மேலும், சிலர் ஈசனிடத்தும் ஆசை கொள்ளாதீர்கள் எனத் தவறாகப் பொருள் கூறி வருகிறார்கள் என்பர். ‘ஈசனோடு’ என்ற சொல்லைக் கவனிக்க வேண்டும். சிவனோடு இருப்பதாகிய கயிலைப் பதவி கிடைத்தும்கூட சிலர் உலக விசயங்களில் ஆசை கொண்டுவிடுகிறார்கள். உலக ஆசை அவ்வளவு வலிமையானது. இதனால், கயிலைப் பதவியை இழந்து மீண்டும் பூமியில் பிறப்பதாகிய இன்னலுக்கு ஆளாகிறார்கள். சிவனின் அணுக்கத் தொண்டராக இருந்த சுந்தரர், உமாதேவியின் தோழிகள் மீது ஆசை கொண்டதால்தான் பூமியில் பிறக்க நேரிட்டது. ஈசனோடு இருந்தாலும் ஆசை ஏற்பட்டால் பிறவித் துன்பம் ஏற்பட்டுவிடும் என்பதை வலியுறுத்தவே திருமூலர் இவ்வாறு கூறியுள்ளார். உலக விசயங்களை வெறுத்து ஆசையை அறுத்து துறவிகளாக மாறுபவர்களும் மனதளவில் இறைவனோடு ஒன்றியிருப்பதாகத்தான் பொருள். ஆனால், இவர்களில் சிலர்கூட கீழ்த்தரமான ஆசை கொண்டு

நெறிதவறிவிடுவதால் துன்பத்திற்கு ஆளாகின்றனர் என்பதனை உணர்த்த திருமூலர் பாடியுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

**பிறர்மனை நயவாமை**

பிறர்மனை நயவாமை அல்லது விரும்பாமை, நோக்காமை என்று கூறப்படுகின்றது. மாங்கனியினைப் போன்ற இல்லாள் அகத்தில் பலாக்கனியினைப் போன்று இருக்கிறாள். காட்டிலுள்ள ஈச்சம் பழம் போன்ற பிறர்மனையாள் நமக்கு எதற்கு என்ற எண்ணம் வேண்டும் என்கிறார் திருமூலர்.

ஆத்த மனையாள் அகத்தே இருக்கவே
காத்த மனையாளைக் காமுறு காளையர்
காய்ச்ச பலாவின் கனி உண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக்கு இடர் உற்றவாறே (திருமூலர், திருமந்திரம்-293).

என்கிறார். மேலும், கள்ளினைப் போலவே காமமும் அறிவினைக் கெடுக்கும். காமச்சிந்தனை உடையோரிடம் கடுகளவும் கடவுள் சிந்தை இராது. இலை நலத்தால் அழகுடன் விளங்கும் எட்டிக் காயினைப் போன்றதே பொதுமகளிர் புணர்வு என்கிறார். அது புறத்தே ஆலைக் கரும்பினை ஒத்தும் அகத்தே வேம்பினை ஒத்தும் காணப்படுவது என திருமூலர் குறிப்பிடுகின்றார். இதனை,

வையத் தேமடவா ரொடும் கூடி ஏன்?
மெய்யகத்தோரும் வைத்த விதி அது
கையகத்தே கரும் பாலையின் சாறுகொள்
மெய் அகத்தே பெரும் வேம்பதுஆமே (திருமூலர், திருமந்திரம்-207).

என்று குறிப்பிட்டுள்ளார். உலகம் எதனால் இயங்குகிறது என்று குறிப்பிட்டுள்ளது போல தருமம் தொலையும் போது இயற்கை சீறும் என்பதையும் உணர வேண்டும். தானம் தருமம் செய்யாதவர்களுக்கு இருமல், சோகை, கோழை, ஜுரம் போன்ற நோய்கள் தோன்றும் என்கிறார் திருமூலர். மேலும், நெடுஞ்சாலைகளில் மரம் நடுதல் அறப்பண்பு என்றும் பிறருக்குக் கொடுக்கப்படாத செல்வம் எட்டிக்காயினுக்கு நிகரானது என்றும் கூறியுள்ளார். பணத்தின் பயன் அறியாதவரே வட்டிக்குப் பணம் தருகின்றார். இதனை,

எட்டி பழுத்த இருங்கனி வீழ்ந்தன
ஒட்டிய நல்லறஞ் செய்யாதவர் செல்வம்
வட்டி கொண்டீட்டியே மண்ணின் முகந்திடும்
பட்டிப் பதகர் பயனறியாரே (திருமூலர், திருமந்திரம்-260).

என்று கூறியுள்ளார்.

**நிறைவுறை**

சித்தர்கள் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள் அல்லர். 18 சித்தர்கள் மட்டும் வாழ்ந்தனர் என்று எண்ணக்கூடாது. நவசித்தர்கள், ஞானசித்தர்கள், தவசித்தர்கள், ஓமசித்தர்கள் என ஆயிரமாயிரம் சித்தர்கள் வாழ்ந்தனர், வாழ்ந்தும் வருகின்றனர். இவர்கள் அனைவராலும் முதல் சித்தராக ஏற்றுக்கொள்ளப்படுபவர் இறைவன் சிவபெருமானே ஆவார். ‘நீ கேளு புலத்தியனே கற்பகமார்க்கம் நிர்மலமாம் சதாசிவனார் எனக்குச் சொன்னார்’ என்பது அகத்தியர் வாக்கு. மனிதர்கள் தாம் வாழும் காலத்தில் எவ்வாறு வாழ வேண்டும் என்பதனைச் சித்தர்கள் பலர் தங்கள் பாடல்களின் வாயிலாகக் கூறியுள்ளனர். பாடலின் கருத்துக்கள் உண்மை நிலையாகிய அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்னும் நான்கனுள் நான்காவதாகிய முக்தி என்னும் வீடுபேற்றினை அடைவது, இறைவனின் திருவடிகளில் நீடினிது வாழ வழிகோலுவதாக அமைந்துள்ளது. மனித வாழ்வு மேன்மையானதாக அமைய வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் அதற்கு வழிகாட்டுபவர்களாக, அர்ப்பணிப்பு உணர்வுடையவர்கள் சித்தர்கள். கொங்கணச் சித்தரின் வாழ்வியல் கதை மூலம் கடமையை ஒருமுகப்பட்டுச் செய்வதே தவம் என்பதை உணரமுடிகிறது. ஊருக்கு உழைத்திடல் யோகம் என்கிறார் பாரதி. பொதுவாகவே பிறருக்கு நன்மை பயப்பதனைச் செய்ய வேண்டும். மனிதர்கள் வாழ்க்கையைச் செம்மையாக வாழ்ந்து இறைமையை நாடுவதுதான் இயற்கையுடன் இயைந்த வாழ்வு என்பதனைச் சித்தர்களின் வாழ்வியல் சிந்தனைகள் அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளதை உணரமுடிகின்றது.

**பயன்படுத்தப்பட்ட நூல்கள்**


1. எஸ்.கே.முருகன், எளிய தமிழில் சித்தர்; தத்துவம், 2011, சிக்ஸ்த்சென்ஸ் பப்ளிகேஷன்ஸ், சென்னை.
2. சித்தர் இலக்கியங்களில் வாழ்வியல் (ஆய்வுக்கோவை-3), 2014, தமிழ்ப்பிரிவு, தொலைதூரக் கல்வி இயக்ககம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.
3. ஸ்ரீ தேவநாத ஸ்வாமிகள், பதினெட்டு சித்தர்களின் வாழ்வும் வாக்கும், 2005, நர்மதா பதிப்பகம், சென்னை.
4. சி.எஸ்.தேவநாதன், சித்தர்களின் வாழ்க்கைச் சிந்தனைகள், 2008, ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை.
5. சித்தர் இலக்கியங்களில் சமூகப் பார்வை, ஆ.கருணாநிதி(தொ.ஆ), 2007, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை.
6. சி.கோ.தெய்வநாயகம், சித்தர் சிந்தனைகள், 2003, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.